இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, சென்னை - 6
அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மருத்துவர். டி.எஸ்.செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

ந.க.எண்.83974/ப.தொ.4/2019/இரு3 நாள் :08..07.2021

பொருள்: பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி- திரு.தி.சிவா த/பெ (அமரர்) திரு.K.திருவேங்கடம்- கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம்- பணிவரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல்-தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.83974/ப.தொ.4/2019/இரு3, நாள்:30.11.2019
2. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், சிவகாசி அவர்களின் கடித ந.க.எண்.5027/அ1/2020, நாள்:26.08.2020.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.83974/ப.தொ.4/2019/இரு3, நாள்:04.12.2020.
4. அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021
5. அரசு கடித எண்.1263/ஏபி1/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:05.03.2021.

*******

**ஆணை:**

இத்துறையில் பரமக்குடி சுகாதாரப் பகுதி மாவட்டம், போகலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவமில்லா மேற்பார்வையாராக பணிபுரிந்த திரு.K.திருவேங்கடம் என்பவர் 19.03.2007 தேதியில் காலமாகியுள்ளார். அவருடைய மகன் திரு.தி.சிவா என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு ஆர்.ரெட்டியாப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம், சிவகாசி சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் பணியில் இணைந்துள்ளார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 04.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், சிவகாசி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. இந்நேர்வில் அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை, நாள்:26.02.2021, பத்திஎண்.(5.1) இல் " 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.தி.சிவா த/பெ (அமரர்) திரு.K.திருவேங்கடம் என்பவர் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இத்துறையில் 04.12.2019 அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்துவருகிறார். எனவே, இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்:26.02.2021

-2-

Scanned with CamScanner

இல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் இந்நேர்வில் எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத காரணத்தினால் திரு.தி.சிவா த/பெ (அமரர்) திரு.K.திருவேங்கடம் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 04.12.2019 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தி.சி.செல்வவிநாயகம்
இயக்குநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு
மருந்துத்துறை, சென்னை-6

பெறுநர்:
தி.சிவா, இளநிலைஉதவியாளர்,
மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், ஆர்.ரெட்டியாப்பட்டி, சிவகாசி சுகாரதாரப் பகுதி மாவட்டம்.

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் சிவகாசி மூலமாக:

நகல்

**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் சிவகாசி:- பதிவஞ்சல்ஒப்புகையுடன்-** (தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் சிவகாசி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் கீழ்கண்ட சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் சிவகாசி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.)

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண்சான்று (அசல்)
2. பனிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்று(அசல்)

நகல்

**துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் பரமக்குடி:- பதிவஞ்சல் ஒப்புகையுடன்-** (மறைந்த அரசு ஊழியர் திரு.K.திருவேங்கடம் என்பவரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் பரமக்குடி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.)

இவ்வலுவலக ப.தொ.4 பிரிவின்இருக்கை 4.

இருப்புக்கோப்பு / உபரி-2

//உண்மை நகல் // உத்தரவின்படி// அனுப்பப்படுகிறது//

[signature] 12/7/21
கண்காணிப்பாளர்

16/7/2021

ந.க.5027/அ1/2020

O/o. துணை இயக்குநர்
சுகாதார பணிகள், சிவகாசி,
நாள்: 7.09.2021.

அனுப்பப்படுகிறது

[signature]
துணை இயக்குநர்
சுகாதார பணிகள், சிவகாசி.
7/9/21

பெறுநர்:- வ.ம.அ, ஆ.சு.நி, ஆர்.ரெட்டியபட்டி

Scanned with CamScanner